1 7 MAR 2022

## சுருக்கம்

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை – வேலைவாய்ப்புப் பிரிவு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – காலஞ்சென்ற திருமதி பா. முருகவள்ளி, அலுவலக உதவியாளர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், சிவகங்கை என்பவரின் மகன் திரு. க.பிரவீன்ஜீவா அவர்கள் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம், கிண்டி, சென்னை–32 அலுவலகத்தில் நியமனம் செய்யப்பட்டது – இளநிலை உதவியாளர் பதவியில் அவர் பணியில் சேர்ந்த 01.03.2021 முதல் பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (என்2) துறை

அரசாணை (2டி) எண்: 12

நாள் : 01.03.2022.
பிலவ வருடம், மாசி–17
திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள். 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
3. துணை இயக்குநர், தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம், கிண்டி, சென்னை–32 அவர்களின் செயல்முறை ஆணை எண். அ1/565/2021, நாள் 26.02.2021.
4. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் அவர்களின் கடிதம் எண்.நிர்2/13267/2020, நாள்.19.01.2022.

------

ஆணை:

மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் வேலைவாய்ப்பு பிரிவில், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம், சிவகங்கை அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து வந்த பா. முருகவள்ளி அவர்கள் 12.09.2019 அன்று அரசுப் பணியில் இருந்தபோது மறைந்ததையொட்டி, அவரது மறைவிற்குப் பின் போதிய வருமானமின்றி அவரது குடும்பம் வறுமையில் வாடுவதாகத் தெரிவித்து,

த.பி.பா.

அவரது மகன் திரு. க. பிரவீன்ஜீவா என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் அரசுப் பணி நியமனம் வழங்குமாறு கோரியிருந்தார் என்றும், அவரது குடும்பத்தில் எவரும் அரசுப் பணியிலோ, தனியார் துறையிலோ பணிபுரியவில்லை என்பதாலும், அவரது குடும்பம் வறுமையில் வாடுவதைக் கருத்தில் கொண்டும் மறைந்த அரசுப் பணியாளரின் வாரிசுதாரரான திரு. க. பிரவீன்ஜீவா என்பவருக்குக் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிநியமனம் வழங்கலாமென முடிவெடுக்கப்பட்டது என்றும், அதனைத் தொடர்ந்து திரு. க.பிரவீன்ஜீவா அவர்களுக்கு மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறை ஆணையில் பணி நியமனம் வழங்கப்பட்டது என்றும், அப்பணியாளர் தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுலவம், கிண்டி, சென்னை–32 அலுவலகத்தில் 01.03.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகின்றார் என்றும் தெரிவித்து, அவரது பணியினை வரன்முறை செய்யுமாறு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

2. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநரின் கருத்துருவினை கருணை அடிப்படையிலான பணி நியமனம் செய்தல் தொடர்பாக மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி அரசு கவனமுடன் பரிசீலித்து திரு. க. பிரவீன்ஜீவா, இளநிலை உதவியாளர், அவர்களது பணியினை, அவர் அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், அவர் பணியில் சேர்ந்த நாளான 01.03.2021 அன்று முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் வரன்முறை செய்து ஆணையிடுகிறது. இவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் தனது ஆண்டு ஊதிய உயர்வு பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வரசாணை, முறையே தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ2) துறை மற்றும் மனிதவள மேலாண்மைத்(ஜி) துறை ஆகியவற்றின் கோப்பு எண்.1401/க்யூ2/2022 மற்றும் அலுவல் சார்பற்ற எண்.4735/ஜி3/2022, நாள். 26.02.2022–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிர்லோஷ் குமார்
அரசுச் செயலாளர்

பெறுநர்

இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, கிண்டி, சென்னை–600 032.

திரு. க. பிரவீன்ஜீவா, இளநிலை உதவியாளர்,
தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம், கிண்டி,
சென்னை–600 032. (வழி: இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும்
பயிற்சித்துறை, கிண்டி, சென்னை–600 032.)

நகல்

அரசு செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர்,
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-600 009.
அரசு கூடுதல் செயலாளரின் நேர்முக எழுத்தர், தொழிலாளர்
நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-600 009.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்(க்யூ) துறை, சென்னை-600 009.
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-600 009.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (அநமு-2) துறை,
சென்னை-600 009.
சுத்த நகல் கோப்புக்கு
இருப்பு கோப்பு / உபரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்